இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE No. 6,330, OCTOBER 1, 1909.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

## LAND SALES.

### காணி விற்பனவுகள்.

No. 567, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பு, 1909 ம் ௵ (செப்டெம்பர்) புரட்டாசி மீ 18 ந் உ.

1909 ம் ஆண்டு மார்கழி மீ 6 ந் தேதி, முல்லைத்தீவில் தன் ஆபிசில் வட மாகாணத்து முல்லைத்தீவு கவர்ண்மேந்து உதவி ஏசென்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவு பண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது ஆட்சி பிலப்பிக்கப்படும்.

9 காணித்துண்டுகள், வட மாகாணத்து முல்லைத்தீவு டிஸ்திறிக்கின் கரைத்துறைப்பற்று, வவுனியா வடக்கு பகுதியிலிருக்கின்றது.

| துண்டு. | குறிச்சி | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | தரிப்புவிலை ஏக்கரொன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இல. 2,715. கோடாலிக்கல்லு. உரித்தாளி—முடி. | | | | | |
| 9608 | பார்சடிக்கமம் | வல்லிபுரம் வேலு | நெல்லுக்குதவியகாடு | 5 | 1 | 36 | 15 |
| | | பிளான் இல. 3,530. ஆபிலடி. உரித்தாளி—முடி. | | | | | |
| 13199 | காஞ்சுரையடிக்காடு | — | குளக்கட்டுக்கு விடப்பட்ட நிலம் | 0 | 1 | 24 | — |
| 13200 | ஷை | கந்தர் நல்லதம்பி | நெல்லுக்குதவிய காடு. | 2 | 0 | 20 | 15 |
| | | பிளான் இல. 3,530. நயினமடு. உரித்தாளி—முடி. | | | | | |
| 13201 | பாலையடிக்காடு | இராமுகார்த்திகேசு | நெல்லுக்குதவிய காடு | 3 | 1 | 21 | 15 |
| | | பிளான் இல. 3,531. கொக்குத்தொடுவாய். உரித்தாளி—முடி. | | | | | |
| 13202 | நாவலடிவளவு | ஆறுமுகம் இளையதம்பி | தோட்டத்திற்குதவிய காடு | 0 | 3 | 36 | 15 |
| | | உரித்தாளி—மாப்பாணி நாகன். | | | | | |
| 13203 | மாப்பாணிவளவு | — | தோட்டம் | 0 | 0 | 20 | 20* |
| | | உரித்தாளி—முடி. | | | | | |
| 13204 | நாவலடிவளவு | — | றோட்டுக்கு விடப்பட்ட நிலம் | 0 | 0 | 26 | — |
| 13205 | மாப்பாணிவளவு | — | ஷை | 0 | 0 | 4 | — |
| | | பிளான் இல. 3,550. வெள்ளாமுள்ளி வாய்க்கால். உரித்தாளி—முடி. | | | | | |
| 13265 | விடத்தல்காடு | கணபதி சங்கரன் | தோட்டத்திற்குதவிய காடு | 5 | 0 | 12 | 18† |

* இது அருகதனம். † இதில் விலைபெற்ற மரங்களிருக்கின்றன,

இக்காணிகளைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் முல்லைத்தீவு அரசாட்சி உதவி ஏசென்றதுரை அவர்களிடத்திலும் படங்களைப்பற்றி அளவுகாரத்துரையிடத்திலும் கேட்டறியலாம்.

மகோத்தம ரவர்களின் கட்டளைப்படி,

ஏச். எல். குரும்வாட்,
சுற்றில் இராசாங்க லிகிதர்.

No. 569, N. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1909 ம் ௵ புரட்டாதி மீ 28 ந் தேதி.

1909 ம் ௵ கார்த்திகை மீ 16 ந் தேதி, செவ்வாய்க்கிழமை, காலமே 11 மணியளவில், தன் ஆபிசில், வட மாகாணத்து கவர்ண்மேந்து ஏசென்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் உரித்து முடிவுசெய்யப்படும் அல்லது விற்கப்படும்.

6 காணித்துண்டுகள், வட மாகாணத்து யாழ்ப்பாண டிஸ்திறிக்கின் யாழ்ப்பாணம், வடமருட்சி கிழக்கு முதலிய பகுதியிலிருக்கின்றது.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. | அ. | பெ. | ஏக்கர் ஒன்றுக்கு தரிப்புவிலை. ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| | | பிளான் இலக்கம் 2,733. உரித்தாளி—பிலிப்பு மரியான். | | | | | |
| O 256 | செம்பியன்பற்று | கடற்கரைமணல் வளவு | தென்னந்தோட்டம் | 0 | 0 | 16 | 25 |
| | | பிளான் இல. 3,457. உரித்தாளி—வேலர் கந்தையா. | | | | | |
| 12685 | உடுத்துறை | மணல் காடு | பனைஉள்ள பறட்டைக்காடு இதிலொரு கோவில் கொட்டிவிருக்கிறது | 5 | 2 | 16 | 15 |

619

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேவிக்காரனின் பெயர். | விபரம். | விசாலம், அ.ரூ. பெ. | ஏக்கர் ஒன்றுக்கு தரிப்பு விலை. ரூ. |
|---|---|---|---|---|---|
| 12686 | உடுத்துறை | மணல் காடு | ரோட்டுக்காக விடப்பட்ட நிலம் | 0 0 36 | — |
| | | பிளான் இல. 2,954. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 10571 | உடுத்துறை | கண்டு கட்டித்திவு | தென்னைக்குத்தக்க | 5 0 26 | 15 |
| | | பிளான் இல. 2,957. உரித்தாளி—அரசாட்சி. | | | |
| 10582 | உடுத்துறை | களிமூத்தான் திவு | தென்னைக்குத்தக்க | 7 3 24 | 15 |
| | | பிளான் இல. 3,566. உரித்தாளி—அந்தோனியக்கோ. | | | |
| 13300 | கரையூர் | பறையன் மணல்காடு | தென்னந்தோட்டம் | 0 0 12 | 2400 |

இக்காணிகளைப்பற்றிய வேறே காரியங்கள் அறியவேணுமாகில் கவுண்மேந்து ஏசென்றிடமும் படங்களைப்பற்றிய அளவுத்தோரின் பெரியதுரையவர்களிடத்திலும் அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமரவர்களின் கட்டளைப்படி,

எச். எல். கிருவ்வோட்,
எக்றிங் கொலோனிய செக்கிறத்தர்.

---

No. 1,217, E. P.

கொலோனியல் சக்கிறத்தார் ஆபிசில்,
கொழும்பில், 1909 ம் ஸு புரட்டாசிமீ 18 ந் உ.

1909 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 25 ந் தேதி, வியாழக்கிழமை, பகல், 1 மணிக்கு கிளிவெட்டி இஞ்சினீர் வங்களாவில் இம் மாகாணத்து திருகோணமலை உதவி கவர்ணமெந்து ஏசென்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் உத்தரவுபண்ணப்பட்டிருக்கும் பொருத்தப்பிரகாரம் ஏலதற்கூறி விற்கப்படும்.

42 காணித்துண்டுகள், இம் மாகாணத்து திரிகோணமலை டிஸ்திறிக்கின் கொட்டியாபுர பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் 3,449. எத்தால் நீர்ப்பாய்ச்சக்கூடியது. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித்துண்டின் இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். எ. ரூ. பே. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 92137 | தோப்பூர் | — | நெற்கேற்ற தரை | 12 2 28 | 20 0 |
| 92142 | டிஷ | பி. அகம்மதுலெவ்வை | டிஷ | 10 1 25 | 17 50 |
| 92145 | டிஷ | எஸ். மீராசாய்பு | டிஷ | 5 3 5 | 17 50 |
| 92150 | டிஷ | — | டிஷ | 7 1 16 | 20 0 |
| 92152 | டிஷ | பி. முகம்மது மீராசாய்பு | டிஷ | 4 2 18 | 20 0 |
| 92154 | டிஷ | கெ. சதக்குலெவ்வை | டிஷ | 4 1 20 | 20 0 |
| 92158 | டிஷ | — | டிஷ | 2 0 28 | 15 0 |
| 92160 | டிஷ | — | டிஷ | 1 3 26 | 15 0 |
| 92177 | டிஷ | — | டிஷ | 3 0 16 | 15 0 |
| 92185 | டிஷ | — | டிஷ | 11 3 0 | 19 0 |
| 92189 | கிளிவெட்டி | — | டிஷ | 11 1 4 | 19 0 |
| 92191 | டிஷ | எஸ். முருகப்பன் | டிஷ | 7 0 5 | 19 0 |
| 92194 | டிஷ | — | டிஷ | 18 2 16 | 19 0 |
| 92195 | டிஷ | — | டிஷ | 15 1 34 | 19 0 |
| 92198 | டிஷ | கெ. கனகசபை | டிஷ | 6 1 10 | 20 0 |
| 92200 | டிஷ | கி. சரவணமுத்து | டிஷ | 5 2 0 | 20 0 |
| 92201 | டிஷ | — | டிஷ | 10 2 30 | 20 0 |
| 92202 | டிஷ | — | டிஷ | 6 3 0 | 20 0 |
| 92203 | டிஷ | என். சின்னவாப்பால் கூட்டியடைத்த தரை | டிஷ | 4 2 14 | 25 0 |
| 92205 | தோப்பூர் | எ. பிச்சையும், சி. சேகுத்தம்பியும் | டிஷ | 7 1 34 | 15 0 |
| 92206 | டிஷ | — | டிஷ | 11 2 8 | 15 0 |
| 92216 | டிஷ | எஸ். முகைதீன்வாவா | டிஷ | 8 0 19 | 15 0 |
| | | பிளான் இல. 2,631 (நீர்ப்பாய்ச்சக்கூடியது). உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 77136 | தோப்பூர் | — | நெற்கேற்றதும், தோட்டத்துக்கேற்றதும் | 9 1 30 | 15 0 |
| 77140 | டிஷ | — | டிஷ | 7 3 23 | 20 0 |
| | | பிளான் இல. 2,632 (நீர்பாய்ச்சக்கூடியது). உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 77155 | தோப்பூர் | — | நெற்கேற்ற தரை | 9 2 25 | 20 0 |
| 77156 | டிஷ | — | டிஷ | 10 0 0 | 20 0 |
| 77157 | டிஷ | — | டிஷ | 9 1 0 | 20 0 |
| 77158 | டிஷ | — | டிஷ | 2 0 0 | 20 0 |
| 77160 | டிஷ | — | டிஷ | 9 1 6 | 17 0 |
| 77162 | டிஷ | — | டிஷ | 9 1 13 | 17 0 |
| 77163 | டிஷ | — | டிஷ | 6 3 0 | 17 0 |
| 77166 | டிஷ | — | டிஷ | 9 2 22 | 17 0 |
| 77167 | டிஷ | — | டிஷ | 9 3 30 | 17 0 |
| 77169 | டிஷ | — | டிஷ | 1 0 8 | 15 0 |
| | | பிளான் இல. 3,488. உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 92346 | தோப்பூர் | அத்துக்கன்னியும் மறுபேரும் | நெற்கேற்ற தரை | 9 1 10 | 22 50 |
| | | பிளான் இல. 3,490. உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 92350 | சச்சிலம்பத்தை | செம்பூர்த்தை | நெற்கேற்ற தரை | 3 1 0 | 20 0 |
| | | பிளான் இல. 2,842. உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 87236 | மல்லிகைத்தீவு | — | நெற்கேற்ற தரை | 2 0 20 | 15 0 |

| காணித்துண்டின். இல. | குறிச்சி. | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. று. பே. | தரிப்பு விலை ஏக்கரொன்றுக்கு. ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| | | பிளான் இல. 3,476. உரித்தாளி—அரசாட்சியார். | | | |
| 92309 | மூதூர் | கெ. முகைதீன் பிச்சை | நெற்செய்கிற தரை | 7 0 6 | 15 0 |
| 92310 | டிை | — | விட்டப்பட்ட சேனை | 0 0 38 | 15 0 |
| 92311 | டிை | — | டிை | 0 1 7 | 15 0 |
| 92312 | மூதூர் | — | விடப்பட்ட தோட்டமும் வயலும் | 0 1 21 | 15 0 |
| 92313 | டிை | — | டிை | 0 2 26 | 15 0 |

அல்லைக்குளத்து புதுவேலை முடிந்தவுடன் நீர்பாய்ச்சக்கூடிய தரைகளுக்கு சதாகாலமும் தண்ணீர் வரி ஒரு ஏக்கருக்கு ரூபா 2 வீதம் கொடுக்கவேண்டும்.

இக்காணிகளைப்பற்றிய மேலதிக விபரங்கள் திரிகோணமலை உதவி ஏசன்றுதுரையவர்களிடத்திலும், பிளான்களைப்பற்றி அளவைத்தலைவரிடத்திலுமிருந்து அறிந்துகொள்ளலாம்.

மகோத்தமர் அவர்களினது கட்டளைப்படி,
எச். எல். குறுவோட்,
எக்றிஙின் இராசாங்க லிகிதர்.

---

# LAND ACQUISITION NOTICES.

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

[Galwadukumbura, Matale District.]

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாத்தளை "நோத்ரேட்" என்னும் பாதையின் மூலைகளைக் குறைக்கும்பொருட்டு பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அக்தாவது:—

பிரதமபடத்து இலக்கம் 5,899. குறிச்சி—கல்வடுகும்புற.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| I 914 | பம்னகவத்தை | திறுகாடு | ஜே. றக்கர் | 0 0 10 |
| J 914 | கெற்றகாவகும்புறபில்லாவ | டிை | டி. கிரிவண்டா, டூ. புஞ்சிறுனா, பி. அப்புகாமி | 0 0 7·50 |
| K 914 | கல்கொடயேன | டிை | யு. கலுவண்டா, டூ. புஞ்சிவண்டா, டூ. அப்புகாமி, ஐ. கிரிவண்டா | 0 0 13 |
| K 914¼ | டிை | டிை | ஐ. கிரிவண்டா | 0 0 1·50 |
| K 914½ | டிை | டிை | சி. றக்கர், ஜே. றக்கர் | 0 0 4 |

எடுத்துக்கொள்வதற்கான ஏத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் வைக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துள்ளவர்கள் தாமாவது அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1909 ம் ஞூ கார்த்திகைமாசம் 5 ந் தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு மாத்தளை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1909 ம் ஞூ புரட்டாசிமீ 27 ந் உ.

எவ். ஜி. றிசில்,
உதவி அரசாட்சி ஏசன்று.

---

[Wellawatta, Colombo District.]

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கரை ஓரத்தில் ஒரு றெயில்பாதைக்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அக்தாவது:—

பிரதமபடத்து இலக்கம் 14,050. குறிச்சி—வெள்ளவத்தை.

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|---|---|
| 26022 | குடாவெள்ளவத்தை | வெளிநிலம் | — | 0 0 0·50 |
| Q 905 | டிை | 11 தென்னமரங்கள் உள்ளது | எஸ். ஆர். சொக்மன் பெண் | 0 0 29·50 |
| R 905 | டிை | 4 டிை | டிை | 0 0 9·66 |
| S 905 | டிை | 3 டிை | டிை | 0 0 9·75 |
| 26023 | டிை | தெரு | அரசாட்சி | 0 0 1·60 |
| 26024 | டிை | தெரு | டிை | 0 0 0·75 |
| 26025 | டிை | தெரு | டிை | 0 0 0·83 |
| T 905 | டிை | 4 தென்னமரங்கள் உள்ளது | எதல் விருன்கிஸ் கவுதர், கன்னி | 0 0 14·37 |
| U 905 | டிை | 2 டிை | காலஞ்சென்றுபோன கவுதரால் தெருவாய் வைத்திருந்த நிலம் | 0 0 11·25 |
| V 905 | டிை | 6 டிை | எதல் விருன்கிஸ் கவுதர், கன்னி | 0 0 19 |
| W 905 | டிை | 1 தென்னமரம் உள்ளது | டபின்யு. எல். கார்த் பெண் | 0 0 1·56 |
| X 905 | டிை | 5 தென்னமரங்கள் உள்ளது | காலஞ்சென்றுபோன கவுதரால் தெருவாய் வைத்திருந்த நிலம் | 0 0 11·55 |
| Y 905 | டிை | டிை | டபின்யு. எல். கார்த் பெண் | 0 0 18·30 |

| துண்டு. | காணியின் பெயர். | விவரம். | உத்தாவியின் பெயர் | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|---|---|
| 26026 | குடாவெள்ள வத்தை | தெரு | அரசாட்சி | 0 0 0·70 |
| 26027 | ஷை | தெரு | ஷை | 0 0 0·37 |
| Z 905 | ஷை | 5 தென்னமரங்கள் உள்ளது | காலஞ்சென்றுபோன கவுதரால் தெருவாய் வைத்திருந்த நிலம் | 0 0 8 |
| A 906 | ஷை | வெளி நிலம் | பி. ஆர். அன் சன்ஸின் டி. துரைசாமிக்கு | 0 0 5·50 |
| B 906 | ஷை | ஷை | தீ. உ பமுநான்து | 0 0 1 |
| C 906 | ஷை | ஷை | காலஞ்சென்றுபோன கவுதரால் தெருவாய் வைத்திருந்த நிலம் | 0 0 4 |
| D 906 | ஷை | 3 தென்னமரங்கள் உள்ளது | தீ. உ பமுநான்து | 0 0 4 |
| E 906 | ஷை | 6 ஷை | டவள்யு. கவுதர் | 0 0 15 |
| F 906 | ஷை | 2 ஷை | காலஞ்சென்றுபோன கவுதரால் தெருவாய் வைத்திருந்த நிலம் | 0 0 11 |
| G 906 | ஷை | 6 ஷை | டபிள்யு. கவுதர் | 0 0 11 |
| 26028 | ஷை | தெரு | அரசாட்சி | 0 0 1·30 |
| H 906 | ஷை | தெரு | — | 0 0 0·70 |
| I 906 | ஷை | தெரு | — | 0 0 0·70 |
| J 906 | ஷை | 7 தென்னமரங்கள் உள்ளது | பி. சந்திரம் | 0 0 12 |
| K 906 | ஷை | வெளி நிலம் | காலஞ்சென்றுபோன கவுதரால் தெருவாய் வைத்திருந்த நிலம் | 0 0 6·50 |
| L 906 | ஷை | 1 தென்னமரம் உள்ளது | பி. சந்திரம் | 0 0 4·25 |
| M 906 | ஷை | 6 பழைய தென்னமரங்கள் உள்ளது | ஐ. எல். எம். லெவ்வை மரக்காயர் | 0 0 12·50 |
| N 906 | ஷை | வெளி நிலம் | காலஞ்சென்றுபோன கவுதரால் தெருவாய் வைத்திருந்த நிலம் | 0 0 7·50 |
| O 906 | ஷை | 2 தென்னமரங்கள் உள்ளது | ஐ. எல். எம். லெவ்வை மரக்காயர் | 0 0 9·75 |
| P 906 | ஷை | 3 ஷை | ஷை | 0 0 0·67 |
| Q 906 | ஷை | 5 ஷை | பிறையை அன் மதுபிஸ் அவர்களுக்கு | 0 0 13·75 |
| R 906 | ஷை | 6 ஷை | ஷை | 0 0 18·50 |
| S 906 | ஷை | வெளி நிலம் | காலஞ்சென்றுபோன கவுதரால் தெருவாய் வைத்திருந்த நிலம் | 0 0 5·50 |
| T 906 | ஷை | 4 தென்னமரங்கள் உள்ளது | பிறையை அன் மதுபிஸ் அவர்களுக்கு | 0 0 5·37 |
| U 906 | ஷை | 20 ஷை | எச். டெ. வீறிஸ் | 0 0 36 |
| V 906 | ஷை | வெளி நிலம் | காலஞ்சென்றுபோன கவுதரால் தெருவாய் வைத்திருந்த நிலம் | 0 0 4 |
| W 906 | ஷை | 1 தென்னமரம் உள்ளது | எச். டெ. வீறிஸ் | 0 0 6·75 |
| | | | | 2 0 14·93 |

எடுத்துக்கொள்வதற்கான ஏத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆ-ந்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1909 ம் ஆ கார்த்திகைமீ 1 ந் தேதியன்று 1 மணிக்கு பிற்பகல் கொழும்பு கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1909 ம் ஆ புரட்டாசிமீ 28 ந் உ.

எல். டபிள்யு. பூத்,
அரசாட்சி ஏசண்டு.

## PRELIMINARY NOTICES, WASTE LAND SETTLEMENT.

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

[Galle S. O. 9—1909.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உருத்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஆ ஒக்டோபர் (ஐப்பசி)மீ 1 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்தற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் யோண் இஸ்றில்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

யோண் இஸ்றில்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

கட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் காலி டிஸ்திறிக்கு கினிதும்பத்தைச்சேர்ந்த கல்விற்றிகல என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 485.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம் ஏ. ரூ. பெ. |
|---|---|---|
| 23 ... | பன்சலவெர்டெல ... ... ... ... | 0 0 17 |

* இலக்கம் IV. ம் பாகம் 1410 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்க.

எல்லைகளாவன : வடக்கும் கிழக்கும்-பகலகமகே யுவானும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பன்சலகொடெல்லேவத்தை ; தெற்கு-187,376 ம உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி ; மேற்கு-187,376 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி, செதறகே அமானிசும் மற்றவர்களும் உரித்துப்பேசும் உனகாதெனிய.

II.

பிரதம படம் 485.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 41 ... | கம்மத்தேகெதறவத்த ... ... ... ... | 0 1 32 |

எல்லைகளாவன : வடக்கு-கனேவத்தேகேவாகே தஸ்சங் உரித்துப்பேசும் கம்மத்தேகெதறவத்தை, 87,538 ம் உரிமைப்படத்திற் கண்டிருக்குங் காணி; கிழக்கு-இகலகமகே தொன் அமாரிசும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கம்மத்தெகெதறவத்தை; தெற்கு-அனகந்தெதொல ஆறு; மேற்கு-இகலகமகே தொன் அமாரிசும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கனேவத்தை.

3,588

---

[Hambantota S. O. 81—1909.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஞு ஒக்றோபர் (ஐப்பசி)மீ 1 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு. ஈ. உவேற்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுதது மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவேற்,
விசேஷ உத்தியோகத்தர்.

---

சுட்டிய காணிகளின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திறிக்கு கிறுவாப்பத்து மேற்கைச்சேர்ந்த மிதில்ல என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, கீழ்க்குறிக்குங் காணித்துண்டுகள்:—

I.

பிரதம படம் 315.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 7 ... | மடவின அல்லது அடறகற்றியேலபிம ... ... ... | 8 3 30 |
| 7g ... | ஷை (சிறு குளம்) ... ... ... | 3 0 4 |
| | | 11 3 34 |

எல்லைகளாவன : வடக்கு வெள்ளேகங்கானங்கே கபேகாமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் ஆறகட்டுலபிமேதெனிய, நியொருகன்னெதிகே தினேஸ்காமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கடுகாகொறட்டுவ, கலபத்திஆருச்சிகே நோனிஸஅப்புவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் ஆறகட்டிலபிம அல்லது நோனிஸ அப்பு பதிஞ்சிவத்தை, கலபத்திஆருச்சிகே நோனிஸ்அப்பு உரித்துப்பேசும் ஆறகட்டு லபிமகெபெல்ல, கிட்டட்டபெந்திகே சாமியெல்அப்புவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் ஆறகட்டுலபிம, அபேகுயியபட்டபெந்திகே ஓதிறிஸ்அப்பு உரித்துப்பேசும் ஆறகட்டுலெபிம, வனசிங்ஆச்சிகே நிக்கொலசும் மற்றவர்களும் உரித்துப்பேசும் மதவின அல்லது ஆடறகட்டியலபிம; கிழக்கு-வியனஅப்பு உரித்துப்பேசும் ஜாகொடகேவத்த, வேலவ கமகே தொவானும் மற்றவர்களும் உரித்துப்பேசும் மடவின அல்லது ஆடறகட்டியலபிம; வேலவலகயகே தொன்திறிசாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் மடவின அல்லது ஆடறகட்டியலபிம, வெலலகே பேதறிக் டீ சில்வாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் மடவின அல்லது ஆடறகட்டியலபிம; தெற்கு-கிறமஎல என்னும் நீரோடை ; மேற்கு-பொமலாம்மறுவக் கிராம எல்ல.

II.

பிரதம படம் 315.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 14 ... | குறுகொட்டலந்தேகெறகொப்புவ (இகோடு) ... ... ... | 3 2 16 |
| 16 ... | அபருன்காமிகேவத்தை ... ... ... ... | 1 2 20 |
| 17 ... | அவாசேஇடம ... ... ... ... | 1 2 26 |
| | | 6 3 22 |

எல்லைகளாவன : வடக்கு-எதிரிகுரியபட்டபெந்திகே நிவெஸ்காமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கும்புக்காமுலனேலபிமகெபல. தொன் தாவித் கிறிவர்தனவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கும்புக்காமுல்லபடுகெபெடல ; கிழக்கு-ஓர் றோட்டு, செல்லகன்னெதிகே பபாசிங்ஞோவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் மெதகெற்றுயேகொடவத்தை; தெற்கு-கோயிலின் பராபரிப்புக்காரர் உரித்துப்பேசும் மெதகெற்றியவத்தை, கிராமிகளுக்குரிய பன்சலவத்தை; மேற்கு-கிராமிகளுக்குரிய பன்சலவத்தை, ஓர் றோட்டு, எதிரிகுரிய பட்டபெந்திகே நிவெஸ்காமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கும்புக்காமுலனேலபிமகெபெல.

III.

பிரதம படம் 315.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. று. பே. |
|---|---|---|
| 24p ... | பதுகேயேன அல்லது மகாயேன முதலியன (கன்சபாவ றோட்டு) ... | 0 0 34 |

எல்லைகளாவன: வடக்கு-தலுவத்தைதகே தொன மத்தியாசும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கலுருவகேயென, கலேகன்னெதிகே பேதிறிஸ் உரித்துப்பேசும் பொறலுகனத்தேயென ; கிழக்கு-பதுகேதிக்கொலஸ்காமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பதுகேயென, மேற்படியார் உரித்துப்பேசும் மகாயேன; தெற்கு-சிறதனமுதலன்னுன்சேவே, உரித்துப்பேசும் புலுகாபன்சல, தோமினுகேவாகே தாவித் சிங்ஞோவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் குலுகொறட்டுவ; மேற்கு-வியனபட்டமடிகே அபிலகாமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் ஜாவறகேயென, தங்காலையிலிருந்து அம்பாந்தோட்டைக்குப்போகும் றோட்டு.

* இலங்கையின் IV. ம் பாகம் 1411—1414 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

IV.

பிரதம படம் 315.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|
| 30 ... | கயுகாவத்தை ... ... ... ... | 1 0 15 |
| 31 ... | குரியகேவத்தை ... ... ... ... | 0 3 24 |
| 32 ... | ஷை ... ... ... ... | 0 0 7 |
| | | 2 0 6 |

எல்லைகளாவன: வடக்கு-வர்ணகுலசூரிய பட்டபெந்திகே பொடிஙிங்கோவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பொறலுகனத்தேகேன அல்லது ஙியம்பலகாவத்தை, வர்ணகுலசூரிய பட்டபெந்திகே பொடிஙிங்ஙோ உரித்துப்பேசும் வட்டவல; கிழக்கு-வர்ணகுலசூரிய பட்டபெந்திகே பொடிஙிங்கோ உரித்துப்பேசும் வட்டவல, சவுந்தகனனெதிகே நீக்குலாஸ்காமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பங்கலாவத்தை; தெற்கு-சவுந்தகனனெதிகே நீக்குலாஸ்காமியும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பங்கலாவத்தை; மேற்கு-தொன் யுவானிஸ் வர்ணகுலசூரியவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பொறலுகேன.

V.

பிரதம படம் 315.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பெ. |
|---|---|---|
| 69 ... | மோதறவட்டவானேகும்புற ... ... ... ... | 0 2 8 |

எல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும் மோதறவட்டவானேவெவ; கிழக்கு-ஐயசூரிய பட்டபெந்திகே சிமான்காமி உரித்துப்பேசும் வெவகாவதேனிய்யவத்தை; தெற்கு-முடி உரித்துப்பேசும் மோதறவட்டவானேவெவாய; மேற்கு-ஐயசூரிய பட்டபெந்திகே சலோகாமி உரித்துப்பேசும் பலுகாவதனை, ஐயசூரிய பட்டபெந்திகே தோமிஸ் காமியும் இன்னொருவரும் உரித்துப்பேசும் மோதறவட்டவானேபெத்த.

3,589

[Hambantota S. O. 82—1909.]

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஆு ஒக்ரூேபர் (ஐப்பசி)மீ 1 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் டபிள்யு ஈ. உவேற்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப்பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

டபிள்யு. ஈ. உவேற்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணியின் விவரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திரிக்குக் கிறுவாப்பத்துக் மேற்கைச்சேர்ந்த மெதகந்த என்னுங் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதியில் விபரித்தபடியே 2 றூட் 22 பேர்ச் விசாலமுடையதும், சாமானியமாய் பின்னகெற்றியவத்தை (பாளான தோட்டம்) என்னும் பெயரினுல் அழைக்கப்பட்டு அல்லது அறியப்படுவதும் 134 ம் பிரதமபடத்தில் 4a ந் துண்டாய்க் காட்டப்பட்டதுமான காணி. இதற்கெல்லைகளாவன: வடக்கு-முடி உரித்துப்பேசும் கொஸ்வத்தேயன; கிழக்கு-வீரசிங்கே முதாந்சரிசா உரித்துப்பேசும் தொந்திரிசாவெவ்வத்தை; தெற்கு-பத்தவவத்தைகே சிமன்யும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பின்னகெற்றியவத்தை; மேற்கு-வாதுவகே பெனிக்கா உரித்துப்பேசும் பின்னகெற்றியவத்தை.

* இங்கிலீஸின் IV. ம் பாகம் 1415 ம் பக்கத்தின் படத்தைப் பார்க்க.

3,590

[Hambantota S. O. 83—1909.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஆு ஒக்டோபர் (ஐப்பசி) மீ 1 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின்பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக் கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகத்தர்.

சுட்டிய காணிகளின் விபரம்.

தென் மாகாணம் அம்பாந்தோட்டை டிஸ்திரிக்குக் கிறுவாபத்து மேற்கைச்சேர்ந்த தல்வத்தை என்னும் கிராமத்திலுள்ள இத்துடனிணைக்கப்படும்* படப்பிரதிகளில் விபரித்தபடியே, கீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I.

பிரதம படம் 202.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. பே. |
|---|---|---|
| 18 ... | கறடிவலமுலகேணையும் மெதகேன்வத்தையும் ... ... ... | 2 2 36 |

எல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட மில்லகெபுகேன; கிழக்கு-பெறுமதியில் அரைவிலைக்குக் கொடுக்கப்பட்ட புஞ்சிஉடகேலேவத்தை, தொன் சாமேல் மலவிபதிறன உரித்துப்பேசும் கறடிவலமுலவத்தை, முடியால் விற்கப்பட்ட மாறகாவத்தை; தெற்கு-முடியால் விற்கப்பட்ட மாறகவத்தை; மேற்கு-தொன் சாமேல் மலவிபதிறன உரித்துப்பேசும் லோலுகாவத்தை, பெறுமதியில் அரைவிலைக்குக் கொடுக்கப்பட்ட லோலுகாவத்தை, தல்வத்தை வீறப்புலிகேதிஎப்புவ உரித்துப்பேசும் மாறகாவத்தை, பெறுமதியில் அரைவிலைக்குக் கொடுக்கப்பட்ட மெகிலியகாவத்தை.

* இங்கிலீஸின் IV. ம் பாகம் 1416—1417 ம் பக்கங்களின் படங்களைப் பார்க்க.

II.

பிரதம படம் 202.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம அ. அ. பெ. |
|---|---|---|
| 37 ... | பாலுவத்தை ... ... ... ... | 2 0 8 |

எல்லைகளாவன: வடக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட கலஒட்டுவெவங்கன; கிழக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட கலஒட்டுவெவகேன, பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட சொமேகாவகேன, பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட பாலுவத்தேகேனக்கால்ல; தெற்கு-தமமிந்தி ஆறுக் கிராம எல்ல; மேற்கு-தமமிந்தி ஆறுக் கிராம எல்ல, பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட கலஒட்டுவெவகேன.

II.

பிரதம படம் 202.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. அ. பெ. |
|---|---|---|
| 41 ... | உடகதெனிய ... ... ... ... | 0 2 3 |

எல்லைகளாவன: வடக்கு-சித்திஅப்பு உரித்துப்பேசும் பெவிகாவத்தை, பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட அற்றிக்காககேன; கிழக்கு-பாழ்நிலச்சட்டங்களின் பிரகாரம் முடிக்குரியதெனப் பிரசித்தப்படுத்தப்பட்ட அற்றிக்காககேன, சமறஜின் தொன் தாவித்தும் மற்றவர்களும் உரித்துப்பேசும் காட்டகாவத்தை; தெற்கு சித்திஅப்பு உரித்துப்பேசும் காட்டகாவத்தேக்கேனக்கால்ல; மேற்கு-சித்திஅப்பு உரித்துப்பேசும் காட்டகாவத்தேக்கேனக்கால்ல, மேற்படியார் உரித்துப்பேசும் பெவிகாவத்தை.

3,591

---

[Uva S. O. 44—1909.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தைதனாயினும் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1909 ம் ஆ ஒக்டோபர் (ஐப்பசி)மீ 1 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897 முதல் 1903 ம் ஆண்டு வரையுள்ள பாழ்நிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. ஜீ. பெரேரா துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையில் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமென தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. ஜீ. பெரேரா,
விசேஷ உத்தியோகத்தர்.

---

கட்டிய காணிகளின் விவரம்.

ஊவா மாகாணம் பத்திரித்தைப்பகுதியில் போகொட்கோறளையைச்சேர்ந்த கெதறகும்புற என்னும் கிராமத்தினுள்ள இத்துடனிணைக்கப்படும் *படப்பிரதிகளில் விவரித்தபடியே, பிழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் :—

I

பிரதம படம் 173.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. அ. பெ. |
|---|---|---|
| 20 ... | தவட்டகாயேன ... ... ... ... | 8 3 31 |

எல்லைகளாவன: வடக்கு-முருனுபட்டக் கிராம எல்ல, முடி உரித்துப்பேசும் தவட்டகொடபத்தன அல்லது கோமபொலகொடபத்தன; கிழக்கு-அல்கொலலந்தேகெதற அருபாவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் பன்னஅலகொலலந்தேகும்புற; தெற்கு-குறுகந்தறஅற, அலுத்கெதற குதுகாமியும் இன்னொருவரும் உரித்துப்பேசும் அம்பகும்புற; மேற்கு-கெதறகும்புறகெதற தென்னக்கோன் முதியான்செலாகே குதுகாமி வேதறளவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கெதறவத்தை.

II.

பிரதம படம் 173.

| காணித்துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. அ. பெ. |
|---|---|---|
| 35a ... | கம்மலேவத்தேயேவ ... ... ... ... | 0 1 5 |
| 35c ... | ஷை ... ... ... ... | 1 3 35 |
| | | 2 1 0 |

எல்லைகளாவன: வடக்கு-குறுகந்தறஆற, கெதறகும்புறேகெதற றத்நாயகவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் தெபியன்னேஅருவ; கிழக்கு-சியம்பலகாஅருவே கம்மலேஹின்அப்பு உரித்துப்பேசும் தலகஅருவ, வத்தேகெதற கலுமெனிக்காவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் சியம்பலகாவத்தை முதலியன, உமோலெவ்வை மரிக்காரும் மற்றவர்களும் உரித்துப்பேசும் வேறகொடயாய; தெற்கு-உமோலெவ்வை மரிக்காரும் மற்றவர்களும் உரித்துப்பேசும் வேறகொடயாய; மேற்கு-கபுகொல்லே ஹின்அப்புவும் மற்றவர்களும் உரித்துப்பேசும் கல்பொத்தேயாய, அலுத்வலவ்வே சுதுபண்டா உரித்துப்பேசும் கம்மலேவத்தை.

*இலங்கையின் IV. ம் பாகம் 1418 ம் பக்கத்தின் படங்களைப் பார்க்க.

3,592

[Tenders for License to sell Opium by Retail, Matara.]

இதனால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில் 1899 ம் ஆண்டு தொடங்கி 1905 ம் ஆண்டு வரைக்கும் இயற்றப்பட்ட அபின் கட்டளைச்சட்டங்களின் ஏற்பாடுகளின்படி கீழே குறிக்கப்பட்ட பிரகாரம் மாத்துறை நகரசங்கத்து எல்லைக்குள், கடைவீதியில் ஒன்றும் கோட்டைக்கரையில் ஒன்றும் நகரசங்கத்து அக்கிராசனரால் அங்கீகரிக்கப்படும் இரண்டு தானத்தில அபின் பருத்து விற்பனையின் தத்துவத்திற்காக 1909 ம் ஆண்டு அக்டோபர்மாசம் 21 ந் தேதி வியாழக்கிழமை பகல் ஒரு மணி வரையில் மாத்துறைக் கச்சேரியல் முத்திரை வைத்த வெவ்வேறான கேள்விப்பெத்திசங்கள் பாரமெடுக்கப்படும்.

2. கேள்விப்பெத்திசங்கள் கேட்கவேண்டிய பிரகாரங்கள் :—

(a) 1910 ம் ஆண்டு முதல் ஆறு மாதங்களுக்கு.
(b) 1910 ம் ஆண்டு பிந்தின ஆறு மாதங்களுக்கு.
(c) 1911 ம் ஆண்டு முதல் ஆறு மாதங்களுககு.

3. குத்தகை ஆறு மாதங்களுக்கு மாத்திரம் விற்கப்படும். அரசாட்சியாரின் பிரியப்படி இன்னம் ஆறு அல்லது பன்னிரண்டு மாதங்களுக்கு மேல்பட அக்குத்தகையைப் புதிப்பிக்கலாம்.

4. 1909 ம் ஆண்டு அக்டோபர்மீ 21 ந் தேதி பகல் 1 மணி வரையில் மாத்துறை கச்சேரியில் கேள்விக்காரன் தானேயாவது, அல்லது முறைமையாக எழுத்தில அதிகாரம்பெற்ற அவனது காரியஸ்தனாவது, வந்து சமூகம் தராவிட்டால், கேள்விப்பெத்திசங்களைக் கவனிக்கப்படமாட்டாது.

5. கேள்விப்பெத்திசங்கள் திருப்தியாயில்லாவிட்டால் நகரசங்கத்து அக்கிராசனர் தன்னுடைய இஷ்டப்படி அந்தக் குத்தகையை வெந்திசில் போட்டு விற்பார்.

மாத்துறை நகரசங்க கந்தோர்,
1909 ம் ௵ செப்தெம்பர்மீ 18 ந் உ.

டபிள்யு. எல். கிண்டர்ஸ்லி,
அக்கிராசனர்.

---

சில்லறையில் அபின் விற்க உத்தரவுப்பத்திரங்கள் கொடுத்தற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்.

1. சில்லறையில் அபின் விற்க உத்தரவுவாங்கினவன் ஆனவன், தக்க அதிகாரமுடையவராலே வாங்கினவன் அவன் என்று வெளிப்படுத்திய உடனே, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கை ரொக்கமாகக் கட்டிவிடுதல் வேண்டும். தக்க அதிகாரமுடையார் அந்தத் தொகையைப் பிணையாக வைத்துக்கொள்ளல் வேண்டும்; கடைசி 2 மாதத்துத் தவணைப்பணத்துக்கல்லாமல் கேள்வித்தொகையின் தவணைப் பணமாக அதை உபயோகிக்கக்கூடாது. கேள்வித்தொகையைட் ஆறு மாசத்துக்குஞ் சமமான தொகைப் பாகமாய்ப் பிரித்து குத்தகை யிருக்கும்வரையும் மாசந்தோறும் கடைசித் தேதி நாளில் கொடுத்துவிடல்வேண்டும். முதலாந் தவணைப் பணத்தை 1910 ம் ஆண்டு ஜனபரி (தை)மீ 31 ந் தேதியில் கொடுத்துவிடல் வேண்டும். ஒரு தவணைப்பணம் நிலுவையாம்போது நாள் ஒன்றுக்கு நூற்றுக்கு வருஷாந்த ஒன்பது வீதவட்டி கொடுத்தல் வேண்டும். உத்தரவு வாங்கினவனது வேண்டுகோளின்படி பிணைப் பணத்தொகையை அவனுக்குப் பிரியமான ஒரு வங்கியிலே நிலையாய் (டிப்செட்) போட்டுவைக்கலாம்; அதில் ஏதும் நஷ்டம் நேரிட்டால் அது அவன் பாரமாகும். குறித்த தவணைத் தேதியிலே பணங் கொடுக்கத்தவறினால் நஷ்டம் அவனது பாரமாக, தக்க அதிகாரமுடையவர் உத்தரவை மறுபடி விற்கலாம் அல்லது செல்லாமல் நிற்கும் அத்தனை காலமவு பாகத்தை விற்கலாம்.

2. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப் பத்திரத்துப் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்கவேண்டியது; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல் மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

3. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறு எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவு செய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

4. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்புரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

5. தக்க அதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பட்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸபட்டர் நிலமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுப்பெற்ற இடத்தைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினினது வரவுசெலவுக் கணக்கைப்பற்றிய சகல புத்தகங்களையும், காகிதபத்திரங்களையும், கணக்குத் தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனுவன்; மேலும், அப்படிச்செய்யும்படி விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனை காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபினை யெல்லாம் இன்ஸபட்டர் அல்லது பொலிஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனுவன்; மேலும் அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில் இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடிய மட்டும் விளங்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

8. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பமான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

9. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் வெறித்திருக்கும் எவனொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

10. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில், இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

11. இலக்கமிட்ட பக்கங்களுடையதாய்க் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திரம் பெறுபவனுக்கு அப்போது விலையில்லாமல் சும்மா

கொடுப்பார். புதுபுத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்கஅதிகாரமுடையவரிடத்தே விலை கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது. அவரிடத்தே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்;

12. கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற உடனே அபின் பெற்ற தொகையும் செலவான தொகையுமெல்லாம் கையிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம்; புத்தகத்தின் பத்திக் கோலங்க ளெல்லாம் சரிவர எழுதி நிரப்பியிருக்கவேண்டும். அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பி லுள்ள தொகையைத் தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

13. ஒவ்வோர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது கையிருப்புப் புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், 20 ம் கொந்திசின்படி வைத்திருக்கவேண்டிய புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைப்பதும் உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட சரியான பிரதிகளுக்காக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதிகளைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலிஸ் இன்ஸ்பட்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதிகள் கிடைத்ததா என்று விசாரித்து அவை தவறிவிட்டால் இணைப்பிரதிகள் கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஓர் பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்க்குந் இன்ன வகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல்வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுடையவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவனொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெடுக்கவாவது பெற்றுக் கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழிகாரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்த மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்திஸ் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைகாரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரவுப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்ப்பதற்கு யோக்கியனாகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "சில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதின தொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது கருட்டு விற்றலேயல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல் ஒண்ணாது.

19. அவ்விடத்திற்றானே கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது.

20. நாலு டிறும் நிறைக்கு அதிகமான அபினை விற்றபோதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப்பெயரையும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையும் விற்ற தேதியையுங் காட்டி, கையிருப்புப் புத்தகத்திலே "குறிப்பு" பத்திக்கலத்திலே எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டத் தராசுபடிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ், நாலு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ், ஒரு றூத்தல், இரண்டு றூத்தல், நாலு றூத்தல், ஏழு றூத்தலாகிய அவாட்போர்ச் சாமானிய தரத்து நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப் புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னுற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல்வேண்டும்:—

சில்லறையில் அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாதிரிப் பக்கம்:—

| தேதி. | | ரூ. | அ. | டி. | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|
| ஆனி 1.—கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 | 8 | 4 | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 | 8 | 2 | | |
| மொத்தம் | ... | 28 | 0 | 6 | ... இலக்கம் 1 மொத்தவிலையாளன் சுவாம்பிள்ளை | |
| கொடுத்தது ... | ... | 1 | 7 | 9 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 26 | 8 | 13 | | |
| ஆனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | | |
| மொத்தம் | ... | 26 | 8 | 13 | | |
| கொடுத்தது ... | ... | 0 | 15 | 5 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 25 | 9 | 8 | | |
| ஆனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | | |
| மொத்தம் | .. | 25 | 9 | 8 | | |
| கொடுத்தது ... | ... | 2 | 7 | 1 | | |

### கையிருப்பு ஸ்தொக் புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலிஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை இறுதியட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெலமாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

---

### அவாட்போய் நிறை.

| | | |
|---|---|---|
| 16 டிறும் | = | 1 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 றூத்தல் |
| 28 றூத்தல் | = | 1 குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | 1 கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | 1 தொன் |

குறிப்பு.—180 கிறேய்ன் 6·582 அவாட்போய் டிறும்களுக்குச்சரி ; அதாவது 7 டிறும்களுக்குக்குறைய.

[Tenders for License to sell Opium by Retail, within the Local Board Limits of Ratnapura.]

1899 ம் ஆண்டு 5 ம் இலக்கச் சட்டத்து ஏற்பாட்டின்படியும், 1903 ம் ஸ்ரீ 14 ம் இலக்கச் சட்டத்து ஏற்பாட்டின்படியும், 1905 ம் ஸ்ரீ 9 ம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாட்டின்படியும் இதனால்செய்யும் அறிவித்தல் வருமாறு:—

றெட்டினபுரி லோக்கல்போட் எல்லைக்குள் 1910 ம் ஸ்ரீ ஜனவரி ௴ 1 ந் தேதி முதலாக ஜுன் (ஆனி) ௴ 30 ந் தேதி வரையும் அரசாட்சி உகையமாளுல் அதிவிருந்து இன்னம் ஆறு மாதத்துக்கு அல்லது பன்னிரண்டு மாதத்துக்கு புதுப்படுத்திற விருப்பத்துடன் சில்லறையில் அபின் விற்கிறதற்கு லைசென்சு உத்தரவுகள் விற்பனவுசெய்கிறதற்காக றெட்டினபுரி லோக்கல்போட்டில் 1909 ம் ஸ்ரீ ஒக்ரோபர் ௴ 19 ந் தேதி செவ்வாய்க்கிழமை பின்னேரம் 2 மணி வரையும் "Tender for the Opium Rent" என மேல் எழுதப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் சப்றகமுவை மாகாணத்து அரசாட்சி ஏசன்றரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பின்னால் சொல்லப்படும் காலங்களுக்கு குத்தகைவாங்க கேள்விகள் போடவேண்டும்:—
(a) 1910 ம் ஸ்ரீ முதல் ஆறு மாதங்களுக்கும்.
(b) 1910 ம் ஸ்ரீ அடுத்த ஆறு மாதங்களுக்கும்.
(c) 1911 ம் ஸ்ரீ முதல் ஆறு மாதங்களுக்கும்.

3. கேள்விக்காரன் தானேயாவது முறைமையாக எழுத்தில் றெட்டினபுரி கச்சேரியில் 1909 ம் ஆண்டு ஒக்ரோபர் 19 ந் தேதி செவ்வாய்க்கிழமை பின்னேரம் 2 மணி நேரத்தில் வந்து சமுகமாயிருந்து தனது கேள்வித் தொகையில் மூன்றிலொரு பங்கு உடனேதானே கட்ட ஆயத்தமாயிருந்தாலொழிய யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாததாகும்.

4. இரண்டு மூன்று கேள்விகள் ஒரு சமமான தொகையாக கேட்கப்படும் பக்ஷத்தில் றெட்டினபுரி மாகாணத்து அரசாட்சி ஏசன்றானவர் தமது இஷ்டப்படி பின்வரும் வகையின் ஒன்று செய்யலாம். அந்தக் கேள்விக்காரர்கள் மாத்திரமே விலைவைத்துக் கேட்கும் பிரசித்த ஏலத்தில் உடனேதானே குத்தகையாக விற்கலாம், அல்லது புதுக் கேள்விப்பத்திரங்கள் தரும்படி கேட்கலாம், அல்லது 1899 ம் ஆண்டின் 5 ம் இலக்கமும், 1903 ம் ஆண்டின் 14 ம் இலக்கமும் 1905 ம் ஆண்டின் 9 ம் இலக்கமும் கொண்ட அபின் சட்டத்தின் விதிகளுக்கு இசைய அந்தக் குத்தகையை வேறு வகையில் முடிக்கலாம்.

5. கேள்விப்பத்திரம் ஒவ்வொன்றிலும் கேள்விக்காரனது முழுப்பெயரும் மேல்விலாசமும் கண்டு எழுதியிருத்தல் வேண்டும்.

